# எழுப்புதல் தொனி

EZHUPUTHAL THONI

தனிப்பிரதி: ₹ 5/- | ஆண்டு சந்தா: ₹ 60/-

Per Copy: ₹ 5/- | Annual subscription: ₹ 60/-




# உருக்கமாய் இரங்குவார்!


மலர்: 18 | Volume: 18    மே 2022 | May 2022    இதழ்: 8 | Issue: 8





## அறுவடை பண்டிகை

முக்கந்தபூர் பணித்தளம் - இராயகடா மாவட்டம்



# உங்கள் சகோதரனிடமிருந்து...



**இயேசுவின் இனிய நாமத்தில் அன்பின் வாழ்த்துகள்!**

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர சகோதரிகளுக்கு, தேவனுடைய இரக்கத்தினால் இந்த மாதத்திலும் பத்திரிக்கை மூலமாக உங்களை சந்திப்பதில் கர்த்தருக்குள் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

உங்கள் பிள்ளைகள் தேர்வு எழுதிக் கொண்டிருப்பார்கள் என்று நினைக்கிறேன். தேவன் உன்னத ஞானத்தையும் வேலைவாய்ப்பில் நேர்த்தியான இடத்தையும் தந்தருளுவார். அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும். அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய்க் கிடைக்கும் என்று கர்த்தராகிய தேவன் தான் சொன்னபடியே உங்கள் பிள்ளைகள் வாழ்க்கையிலே செய்வார். தேவன் உங்கள் குடும்பத்தின் மீது கொண்ட நல்ல நினைவுகள் எல்லாம் தடையில்லாமல் நிறைவேற கருத்தாய் ஜெபிக்கிறேன்.

உலக நாடுகளில் நடக்கும் நிகழ்வுகளைப் பார்க்கும்போது நாம் காண்கிற இந்த உலகம் முடிவுக்கு வந்துவிட்டதையும் இயேசு தாம் சொன்னபடியே தம்முடையவர்களை மீட்கும்படியாக வரப்போகிறார் என்பதையும் நாம் தெளிவாக அறிந்து கொள்ளமுடியும். ஆகவே, எப்பொழுதும் விழிப்புடன் ஜெபியுங்கள்.

நீங்கள் எப்பொழுது ஜெபித்தாலும் தேசத்திலே தீவிரமாய் சுவிசேஷத்தை அறிவித்து வருகிற மிஷனெரிகளை நினைத்துக் கொள்ளுங்கள். நான் உங்களுக்காக நம்முடைய கல்வாரி குடும்பத்தோடு இணைந்து கருத்தாய் ஜெபிக்கிறேன். தேவனுடைய கிருபை உங்களோடு இருப்பதாக!

எழுப்புதல் பணியில்,

T. A. G.

**(T.ஆசீர் ஞானராஜ்)**

வங்கியின் மூலமாக பணம் அனுப்பும்போது தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்தவும்.

**94865 88270**

Follow us youtube channel:
**Asir Gnanaraj**

24 மணி நேர ஜெப உதவிக்காக:
**94869 19522, 81909 25800**
**ஊழிய விபரங்களுக்கு: 94865 88270**
Email: calvarygospelmm@gmail.com

**https://www.youtube.com/channel/UCOKkrVUWceMTwtC2dKOl4zg (or)**



# உருக்கமாய் இரங்குவார்!

**நான் திரும்பினபின்பு மனஸ்தாபப்பட்டுக்கொண்டிருக்கிறேன், நான் என்னை அறிந்துகொண்டதற்குப் பின்பு விலாவில் அடித்துக்கொண்டிருக்கிறேன், வெட்கி நாணிக்கொண்டுமிருக்கிறேன், என் இளவயதின் நிந்தையைச் சுமந்துவருகிறேன் என்று எப்பிராயீம் துக்கித்துப் புலம்பிக்கொண்டிருக்கிறதை நிச்சயமாய்க் கேட்டேன். எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் அல்லவோ? அவன் எனக்குப் பிரியமான பிள்ளையல்லவோ? அவனுக்கு விரோதமாய்ப் பேசினது முதல் அவனை நினைத்துக்கொண்டே இருக்கிறேன்; ஆகையால் என் உள்ளம் அவனுக்காகக் கொதிக்கிறது; அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார்.**
**எரேமியா 31:19,20**

## தீர்க்கதரிசன செய்தி: சகோ. T.ஆசீர் ஞானராஜ்

*பிரியமானவர்களே, நாம் ஆராதிக்கக் கூடிய தேவன் மிகவும் அன்புள்ள தெய்வம். ஆண்டவர் மனிதனை உண்டாக்கும் போது மன சந்தோஷத்தோடு கூட அவனை உண்டாக்கினார். ஏனென்றால், இந்த உலகத்தில் உண்டாக்கின எல்லாவற்றையும் அவர் தமது சாயலாக உண்டாக்கவில்லை. ஆனால் மனிதனை தன்னுடைய சாயலாக தன்னைப் போலவே அவர் உண்டாக்கினார். ஆண்டவர் மனிதனை உண்டாக்கி அவனுக்கு கட்டளை கொடுத்த போது தேவகட்டளையை மனிதன் மீறினான்.*

*தேவனையும் மனிதனையும் பிரிப்பது மனிதனுடைய பாவம். **உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது; உங்கள் பாவங்களே, அவர் உங்களுக்குச் செவிகொடாதபடிக்கு அவருடைய முகத்தை உங்களுக்கு மறைக்கிறது – ஏசாயா 59:2.** பிதாவாகிய தேவன், எப்பிராயீம் எனக்கு அருமையான பிள்ளை என்று சொல்லுகிறார். எனக்கு பிரியமான குமாரன் அவன் தன் பாவத்தை நினைத்து மனஸ்தாபப்படுகிறதினாலே என் உள்ளம் கொதிக்கிறது. ஆகவே நான் அவனுக்கு உருக்கமாய் இரங்குவேன் என்று ஆண்டவர் சொல்லுகிறார். வேதாகமத்திலே தீர்க்கதரிசிகளுடைய புத்தகத்திலே மூன்று கோத்திரங்களைக் குறித்து ஆண்டவர் அதிகமாய் சொல்லியிருப்பார். பன்னிரெண்டு கோத்திரம் உருவாக்கப்பட்டாலும்*

மூன்று கோத்திரங்கள் இஸ்ரவேலில் மிகவும் முக்கியமான கோத்திரமாக இருந்தது. அதிலே யூதா கோத்திரத்தை குறித்து ஆண்டவர் பல இடங்களிலே சொல்லுகிறார். லேவி கோத்திரத்தை குறித்தும் நாம் பார்க்கிறோம். ஆனால் எல்லாவற்றிற்கும் மேலாக எப்பிராயீம் என்ற வார்த்தையை வேதாகமத்திலே அல்லது தீர்க்கதரிசிகளுடைய புத்தகத்திலே பல்வேறு இடங்களில் பார்க்கமுடியும். யாக்கோபு பன்னிரெண்டு குமாரர்களை பெற்றான். லேவியைத் தேவன் தமக்காக எடுத்துக்கொண்டார்.

யோசேப்பின் நிமித்தமாக வந்த குமாரர்கள் இரண்டு பேரும் கோத்திரத்திலேசேர்க்கப்பட்டார்கள். யோசேப்புக்கு பதிலாக அவனுடைய பிள்ளைகள் மனாசே, எப்பிராயீம் இரண்டுபேர் இஸ்ரவேல் கோத்திரத்திலே கர்த்தராலே ஏற்படுத்தப்பட்டார்கள். மனாசே மூத்தவனாய் இருந்தான். யாக்கோபு வயது முதிர்ந்த காலத்தில் அவன் மரணமடையும் சமயத்திலே யோசேப்பு தன் தகப்பனை பார்க்கும்படிக்கு பிள்ளைகளை அழைத்துக்கொண்டு போனான். அப்பொழுது பிள்ளைகளை யாக்கோபு ஆசீர்வதிக்கும்படிக்கு அருகில் வரும்படி அழைத்தான். அழைத்த போது இடது கை பக்கமாக எப்பிராயீம் நின்றுகொண்டிருந்தான். வலது பக்கமாக மனாசே நிறுத்தப்பட்டிருந்தான். அந்த கால வழக்கப்படி மூத்தகுமாரருக்கு அநேக ஆசீர்வாதங்கள் உண்டு. முதிர்வயதுள்ள தகப்பனாலே வலதுகரத்தினால் ஆசீர்வதிக்கப்படுவார்கள். இங்கே யாக்கோபு வித்தியாசமாக இளையவன் மேலே வலது கரத்தையும் மூத்தவன் மேலே இடது கரத்தையும் வைத்தான். யோசேப்புக்கு அது பிடிக்கவில்லை. அப்பா தெரியாமல் கண்பார்வையற்ற நிலையில் மாற்றி கை வைக்கிறார் என்று எண்ணி, சொன்னபோது அங்கே யாக்கோபு நான் தெளிவாகத் தான் கையை வைத்திருக்கிறேன் என்று சொல்லுகிறான். மனாசேயும் கர்த்தராலே ஆசீர்வதிக்கப்படுவான் ஆனால் மனாசேயைப் பார்க்கிலும் எப்பிராயீம் பெரியவனாய் இருப்பான் என்றான். இந்த எப்பிராயீம் கோத்திரம் இஸ்ரவேலிலே மிகவும் விசேஷமான கோத்திரம். இந்த கோத்திரத்தில் தான் யுத்தம் செய்யக் கூடிய பராக்கிரமசாலிகள் அதிகமாய் இருந்தார்கள். யுத்தம் செய்யக் கூடிய பலசாலிகள் எல்லா கோத்திரத்திலும் இருந்தாலும் யுத்தத்தில் பராக்கிரமம் நிறைந்தவர்கள் நல்ல திறமைசாலிகள் எப்பிராயீம் கோத்திரத்தில் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டிருந்தார்கள். அவர்கள் யுத்தத்திலே முன்னணியிலே நிறுத்தப் பட்டிருந்தார்கள். யுத்தத்திலே முன்னாக நின்று எதிராளியை வீழ்த்தக் கூடியதிலே எப்பிராயீம் கோத்திரத்தினுடைய பங்கு இஸ்ரவேலிலே மிக முக்கியமாக இருந்தது. அதுமாத்திரமல்ல யோசுவா எப்பிராயீம் கோத்திரத்தை சேர்ந்தவனாய் இருந்தான். மோசேயினுடைய நாட்களிலே யுத்தத்தை யோசுவா முன்னின்று நடத்தினதை நாம் வேதத்திலே பார்க்கிறோம். ஊரும் ஆரோனும் மோசேயினுடைய கரத்தை தாங்கிப்பிடித்த போது யோசுவா முன்னே சென்று படைகளை அழைத்துக்கொண்டு போய் யுத்தம்பண்ணி அமலேக்கியர்களை முறியடித்தான் என்று வேதாகமத்திலே நாம் வாசிக்கிறோம். ஆகவே யுத்தத்திலே முன்பாக யுத்தத்திற்கு தலைவனாக நின்றசேனைத்தலைவன் எப்பிராயீம்

கோத்திரத்தை சார்ந்தவனாய் இருந்தான். ஓசியா தீர்க்கதரிசி தன்னுடைய புத்தகத்திலே எப்பிராயீமைக்குறித்து அநேக இடங்களில் எழுதி வைத்திருக்கிறார். இந்த எப்பிராயீமின் மீறுதலையும் எப்பிராயீம் மனந்திரும்புதலையும் தேவனாகிய கர்த்தர் எரேமியா தீர்க்கதரிசிக்கு உணர்த்தி உரைத்து அதை நாம் அறிந்து கொள்ளும்படியாக ஆவியானவர் நம்மை வழிநடத்துகிறார். எப்பிராயீம் அவன் எந்த அளவுக்கு இஸ்ரவேலிலே மிக முக்கிய பங்குள்ளவனாய் இருந்தானோ அவ்வளவாய் கர்த்தருக்கு விரோதமான பாவத்தை ஒரு நாளிலே செய்தான். தேவனுக்கு விரோதமான பாவம். ஆண்டவர் விலக்கின பாவத்தை எப்பிராயீம் கோத்திரத்தார் மற்ற கோத்திரத்தைப் பார்க்கிலும் துணிகரமாய் செய்தார்கள். எனவே கர்த்தருடைய கோபம் எப்பிராயீம் கோத்திரத்தின் மீது இறங்கிற்று. சிறைப்பட்டுப் போகும் காலத்திற்கு முன்னாக எரேமியா தீர்க்கதரிசியின் மூலமாக இஸ்ரவேல் ஜனங்களிடத்தில் தேவன் பேசும் போது இந்த எப்பிராயீமினுடைய பாவத்தைக் குறித்தும் விளக்கி தீர்க்கதரிசிகள் மூலமாக தேவன் சொல்லுகிறார். எப்பிராயீம் என்ன காரியத்தை செய்தான் என்பதை தியானிப்போம்.

***எப்பிராயீம் விக்கிரகங்களோடு இணைந்திருக்கிறான். – ஓசியா 4: 17*** எப்பிராயீம் விக்கிரக பாவத்தை முதலாவது துணிந்து செய்தான். எப்பீராயீம் இளம்வயதிலே யாக்கோபு மூலமாக தீர்க்கதரிசனமாக ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்ட போதும் எப்பிராயீம் இஸ்ரவேல் ஜனங்களில் முதலாவது பாவத்தை செய்தவனாக தேவன் விலக்கினதை துணிகரமாய் செய்யக் கூடிய ஒரு கோத்திரமாய் இஸ்ரவேலிலே அவர்கள் காணப்பட்டார்கள். முதலாவது எப்பிராயீம் கோத்திரத்தார் விக்கிரகத்தோடு இணைந்திருந்தார்கள். ஒரு குடும்பம் தேவனுடைய கிருபையை எப்படி இழந்து போகிறதென்றால் விக்கிரகத்தோடு கூட இணைந்து நிற்பதினால், புறஜாதிகளோடு ஐக்கியமாய் இருப்பதினால் இழந்து போகிறார்கள். புறஜாதிகள் மத்தியில் பெண் கொடுப்பது பெண் எடுப்பது இப்படிப்பட்ட பாவத்தை செய்யும்போது அல்லது தொழில் ரீதியாக ஐக்கியப்படும்போது அவர்கள் அந்நிய நுகத்தோடு பிணைக்கப்படும் போது கர்த்தருடைய கோபத்தை அவர்கள் சுமக்க துவங்குகிறார்கள்.

WANTED

## முன்னேற்றப் பணியாளர்கள் தேவை

**அர்ப்பணிப்புள்ள ஊழியஞ்செய்ய**

**வாஞ்சையுள்ள சகோதர சகோதரிகள் தேவை.**

**முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.**

**திறமைக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.**

**தொடர்புக்கு: 9486588270,9486919522.**

எனக்கு அறிமுகமான அருமையான கர்த்தருடைய மனிதர். அவர் தொழில் ரீதியாக விக்கிரகத்தை வைராக்கியமாக வழிபடக் கூடிய ஒருவரோடு கூட ஐக்கியப்பட்டார். அந்த தொழில் ஆரம்ப காலத்தில் ஆசீர்வாதமாய் நடந்து கொண்டிருந்தது. அந்த தொழிலானது நாளுக்கு நாள் விரிவடைய துவங்கிய போதெல்லாம் ஒவ்வொரு பகுதியிலும் அங்கே ஜெபம் பண்ணும்படிக்கு நான் அழைக்கப்பட்டேன். நான் புறப்படும் போதெல்லாம் ஜெபம் பண்ணி கர்த்தருடைய வார்த்தையோடு தான் நான் கடந்து செல்வதுண்டு அப்பொழுதெல்லாம் ஆண்டவர் எனக்குள்ளே சொல்லக் கூடிய ஒரே வார்த்தை அந்நிய நுகத்தோடு என்னுடைய மகன் இணைந்திருப்பதை நான் விரும்பவில்லை.இதினிமித்தமாக அவனுடைய இருதயம் வழுவிப்போகும் ஆகவே அவனுக்கு புத்திசொல்லி அதிலிருந்து அவன் வெளியே வரும்படிக்கு நீ அவனை வழிநடத்த வேண்டுமென்று ஆண்டவர் என்னை உணர்த்திகொண்டே இருந்தார். நான் போகும்போதெல்லாம் அங்கு அந்த பகுதி முடிந்தவுடனே அவரை தனியே அழைத்து அவரோடு அமர்ந்து வசனத்தை எடுத்து நான் விளக்கி காண்பிப்பேன். ஆனால் அவர் சொன்ன பதில் என்னவென்றால், தொழில் ஆசீர்வாதமாகத் தானே நடக்கிறது என்றார். ஒரு நாள் அவருடைய அலுவலகத்திலே அவருடைய வியாபாரத்தை பெரிய அளவிலே செய்யும்படிக்கு ஆண்டு விழா ஒழுங்கு செய்திருந்தார்கள். அங்கே நான் சென்ற போது அந்த அலுவலகத்திலே விக்கிரக படங்கள் இருந்தது. அதோடுகூட வேத வசன போட்டோக்களும் இருந்தது. இதையெல்லாம் ஒன்றாக வைத்து அவர்களும் அருகருகே அமர்ந்திருந்தார்கள். அந்த நாளிலும் நான் மனஸ்தாபப்பட்டு கர்த்தருடைய ஆலோசனைகளை நான் சொல்லி வந்தேன். சில தினங்கள் கழித்து பத்திரிக்கையிலே பார்த்த போது அவர் புதிதாக ஒரு தொழிலை துவங்குவதற்கு விக்கிரகத்திற்கு பூஜை செய்யும் ஃபோட்டோவை செய்தித்தாளில் பார்த்து நான் துக்கமடைந்தேன். கொஞ்சம் கொஞ்சமாக அந்த நட்பானது அவரை விக்கிரகத்திற்கு அடிமைப்படுத்தியது. விக்கிரகத்தை வணங்கும்படிக்கு அவரை கொண்டு போக கடைசியாக நான் அதை பத்திரிக்கையில் பார்த்த போது எனக்கு கண்ணீர் வர ஆரம்பித்தது. ஆண்டவரே இவரை மன்னிக்க வேண்டும் என்று ஜெபித்தேன். கர்த்தருடைய கோபம் அவருடைய தொழில் மேலே பெருக ஆரம்பித்தது. எப்படி படிப்படியாக உயர்த்தப்பட்டார்களோ, அப்படியே படிப்படியாக ஒவ்வொன்றாக இழக்க ஆரம்பித்தார்கள். ஒவ்வொன்றாக இழந்து கடைசியாக பெரிய நிர்வாகம் சிதைய ஆரம்பித்தது. கடனாளிகளாக மாறினார்கள். பல கோடிகளுக்கு கடனாளிகளாக மாறி கடன் சுமை நிமித்தமாக மனஅழுத்தம் உண்டானது பின் ஒருநாள் அவர் சடுதியிலே மரித்து போய் அவருடைய குடும்பம் இன்றைக்கு நிர்க்கதியான நிலைக்கு தள்ளப்பட்டது.

*எப்பிராயீம் விக்கிரகத்தோடு இணைந்திருக்கிறான். ஆண்டவர் எதையெல்லாம் விலக்குகிறாரோ அது விக்கிரகம். ஆண்டவரை விட்டு எதுவெல்லாம் உங்களை பிரிக்கிறதோ அது விக்கிரகம். குறித்த நேரம் வந்துவிட்டால் அந்த தொடரை பார்க்காமல் இருக்க முடியாது என்ற நிலைக்குத்*

தள்ளப்படுகிறீர்களா? அது விக்கிரகம். ஆண்டவரை மீறி எதின் மீதெல்லாம் உங்கள் இருதயம் அமருகிறதோ எதையெல்லாம் இச்சிக்கிறதோ அது உங்களை அடிமைத்தனத்திற்குள்ளே கொண்டு போகிறது. அது விக்கிரகமாய் மாறுகிறது. தேவனை விட்டு விலகி நீங்கள் அசுத்தமானதை தொடாதிருங்கள். அதன் பின்னே போகாதிருங்கள். வெளியே பக்திக்குரியவர்கள் போல வேஷம் ஆனால் அந்தரங்கத்திலே அடிமைத்தனம். எப்பிராயீம் விக்கிரகத்தோடு இணைந்திருந்தான். ஒரு பக்கம் ஜெபம் ஆனால் உள்ளே இரகசியமான பாவத்தினால் அடிமைத்தனம். ஆண்டவர் விலக்கினதை இச்சித்து அதை பின்தொடர்ந்து பாவத்தை செய்ததினால் ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்ட எப்பிராயீம் கோத்திரத்தார் பிற்பாடு கர்த்தராலே சபிக்கப்பட்டு தாழ்த்தப்பட்டார்கள். அவர்கள் சிறையிருப்பை சுமந்தார்கள்.

***எப்பிராயீம் அந்நியஜனங்களோடே கலந்திருக்கிறான்; எப்பிராயீம் திருப்பிப்போடாத அப்பம். – ஓசியா 7:8*** *அந்நிய நுகத்தோடு அவிசுவாசிகளோடு நீங்கள் பிணைக்கப்படலாகாது. ஒளிக்கும் இருளுக்கும் ஐக்கியமேது. கிறிஸ்துவுக்கும் பேலியாளுக்கும் சம்பந்தமேது. தேவனுடைய ஆலயத்திற்கும் விக்கிரகத்திற்கும் சம்பந்தமேது. நான் அவர்களுக்குள்ளே உலாவி அவர்கள் தேவனாயிருப்பேன். அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.* ***தேவனுடைய ஆலயத்துக்கும் விக்கிரகங்களுக்கும் சம்பந்தமேது? நான் அவர்களுக்குள்ளே வாசம்பண்ணி, அவர்களுக்குள்ளே உலாவி, அவர்கள் தேவனாயிருப்பேன், அவர்கள் என் ஜனங்களாயிருப்பார்கள் என்று, தேவன் சொன்னபடி, நீங்கள் ஜீவனுள்ள தேவனுடைய ஆலயமாயிருக்கிறீர்களே – 2கொரி 6:16*** *சிலர் திருமணம் என்ற பகுதி வந்தவுடனே கண்மூடித்தனமாக காணப்படுவர். கண்மூடித்தனமான நிலையில் செயல்படுவர்.*

**ஒரு கர்த்தருடைய பிள்ளை விக்கிரக வழியிலே போய் திருமணம் செய்து குடும்பத்தை நடத்த துவங்கினான். ஏனென்றால் அந்த பெண்ணின் மீது அவனுக்கு விரும்பம் உண்டானது. பெற்றோரிடத்தில் சொல்லி பெற்றோர் சம்மதத்துடன் திருமணம் நடந்தது. அந்த பெண் பெயரளவிலே ஞானஸ்நானத்தை பெற்றுக்கொண்டு கிறிஸ்தவளாக மாறினாள். ஆனால், கிறிஸ்துவுக்கும் அவளுக்கும் எந்த தொடர்புமே இல்லை. கிறிஸ்துவைக்குறித்து எந்த அறிவும் இல்லாமல் ஒரு மாப்பிள்ளைக்காக அவள் ஞானஸ்நானம் பெறுகிறாள். பெண்ணுக்காக இவன் தேவ கட்டளையை மீறுகிறான். திருமணம் அங்கு நடைபெறுகிறது. திருமணமாகி ஒரு ஆண்டிலே ஒரு குழந்தையை பெற்றெடுத்தார்கள். அந்த குழந்தை மூன்றாம் நாளிலே சரீரத்தில் வியாதிப்பட்டு தாய் ஒருபுறமாக பிள்ளை ஒருபுறமாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டு மருத்துவமனையில் இருந்தார்கள். சரீரத்தில் குடல் பகுதியில் உண்டான பிரச்சனை நிமித்தமாக பிள்ளையின் வயிறு வீங்கி கொண்டேயிருந்தது. மூன்றாம் நாளிலே பிள்ளையின் வயிற்றில் அறுவை சிகிச்சை செய்து குடலை எடுத்து வெளியே தொங்க விட்டிருக்கிறார்கள். அதை வைத்துக்கொண்டே அந்த பிள்ளையை இவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டும்.**

**மறுபடியும் ஆறு மாதத்திற்கு பின்பு அந்த குடலை எடுத்து உள்ளே வைத்து அந்த பிள்ளைக்கு அறுவை சிகிச்சை செய்து அதை சரிசெய்தார்கள். அந்த மனிதர் பல இலட்சங்களுக்கு கடனாளியாக மாறினார். இரவு பகலாய் கண்ணீரை வடிக்க ஆரம்பித்தார். ஐந்து வயது மதிக்கத்தக்க அந்த பிள்ளை ஐந்து மாத பிள்ளை போல வளர்ச்சியற்ற நிலையிலே அது படுக்கையிலே இருக்கிறது. நாள் ஒன்றுக்கு பல ஆயிரங்கள் செலவு செய்யப்படுகிறது.**

*தேவனுடைய நாமம் தரிக்கப்பட்ட மனிதன் வாழ்க்கையிலே இப்படி சம்பவிக்க காரணம் என்ன? அந்நிய ஜனத்தோடு அவன் கலந்து விட்டதால் கர்த்தர் விலக்கினதை கட்டளையை மீறி தேவனுக்கு விரோதமான பாவத்தை செய்து விட்டதினால் இந்த நிலை வந்தது. எப்பிராயீம் திருப்பிப் போடாத அப்பம். சில மனிதருடைய வாழ்க்கையிலே விட்டு விட முடியாத பாவக்கட்டுக்குள்ளே அடிமைத்தனத்திற்குள்ளே அவர்கள் கட்டப்பட்டிருப்பதை நாம் பார்க்க முடியும். **செத்த ஈக்கள் தைலக்காரனுடைய பரிமளதைலத்தை நாறிக் கெட்டுப்போகப்பண்ணும் – பிரசங்கி 10:1** அதுபோல தேவன் கொடுக்கிற வாக்குத்தத்தத்தையும் ஆசீர்வாதத்தையும் சில குடும்பம் பெற்றுக்கொள்ள தடையாக அவர்களுடைய கிரியைகள் ஆண்டவருக்கு எரிச்சலை உண்டாக்குகிறது. திருப்பிப் போடாத அப்பம். அப்படியென்றால் ஒரு பக்கம் வெந்ததும் மற்றொரு பக்கம் வேகாததுமாய் இருக்கும். ஒரு பக்கம் பக்தி பக்தி என்று வேஷம். மற்றொரு பக்கம் தேவனை வேதனைப்படுத்தக் கூடிய ஒரு ஜீவியம். ஆண்டவரை வேதனைப்படுத்தக் கூடிய வாழ்க்கை.*

**ஒரு விசுவாசமுள்ள சகோதரர் அவரால் இயன்ற மட்டும் ஊழியத்தை செய்வார். வேலை செய்து கொண்டே ஊழியத்தை செய்வார். அநேகரை ஊழியத்திற்கு நேராக வழிநடத்துவது, கூடி எல்லாருமாய் சேர்ந்து தேசத்திற்காக ஜெபிப்பது என்று, எல்லா நிகழ்வும் அவருடைய வாழ்க்கையில் உண்டு. ஆனால் அவருடைய வீட்டிற்குள்ளே அவருக்கு கோபம் வந்துவிட்டால் பிள்ளைகள் படுக்கைக்கு அடியில் போய் ஒளிந்து கொண்டு நடுங்கிக் கொண்டிருப்பார்களாம். சிங்கம் காட்டில் சில நேரங்களில் கர்ச்சிக்கும் போது மற்ற மிருகங்களுக்கு இருதயமே நடுங்கிப் போகுமாம். அதைப் போலத்தான் அந்த மனிதருக்கு கோபம் வந்துவிட்டால் மதம் பிடித்த யானைக்கு சரியாக நடந்துகொள்வாராம். எந்த இடமென்றும் பாராமல் தாறுமாறாக கடிந்து கொண்டு பேச ஆரம்பிப்பார். அவரது மனைவியை அந்நேரத்தில் ஆக்ரோஷமாக தாக்கி விடுவார். இதன் மூலமாக ஆண்டவருடைய நாமம் தூஷிக்கப்பட்டது. ஒரு நாள் ஆண்டவர் அவருக்கு ஒரு தரிசனத்தை காண்பித்தார். அந்த தரிசனத்திலே பிலாத்துவினுடைய அரண்மனைக்கு அருகில் குதிரை கட்டி வைக்கிற தூணிலே இயேசுவை கட்டி வைத்து சுமார் நாற்பது அடிகள் அடித்ததை நாம் பார்க்கிறோம். அதைப்போல அந்த தூணிலே இயேசு கட்டப்பட்டிருக்கிறார். அவரை அடிப்பதற்காக சவுக்கு ஒரு மனிதனுடைய கையிலே இருக்கிறது. அந்த மனிதன் போர்ச்சேவகனில் ஒருவனாய் நின்று கொண்டு சவுக்கை எடுத்து இயேசுவை ஓங்கி ஓங்கி அடிப்பது போல தரிசனம். அப்பொழுது**

அவருடைய பெயரை சொல்லி இயேசு சத்தமிட்டு அழுகிறார். மகனே நீ என்னை அடிக்காதே அடிக்காதே. அந்த மனிதர் திரும்பவும் இயேசுவை சவுக்கை கொண்டு அடிக்கிறார். இயேசுவினுடைய சரீரமெல்லாம் இரத்தமாய் ஊற்றுகிறது. இயேசுவின் வாழ்க்கை வரலாறு காட்சியைப் போல இருக்கிறது. ஆனால், அதில் அடிப்பது இந்த ஊழியர் அடிப்பது போல இவர் கண் முன்னே வருகிறது. இயேசுவை அவர் துன்பப்படுத்துவது போல கண்விழித்து எழுந்து முழங்காலில் நின்று அழுதார். இயேசு அவரோடு கூட பேச ஆரம்பித்தார். மகனே உன் வாயின் வார்த்தைகள் நீ எரிச்சல் அடைந்து செய்யக் கூடிய சில செயல்கள் என்னை மறுபடியும் மறுபடியும் சவுக்கினால் அடித்து வேதனைப்படுத்தக் கூடியதாய் இருக்கிறது என்று சொன்னார். இந்த ஊழியர் உள்ளம் உடைந்தார். இயேசுவினுடைய பாதத்திலே விழுந்தார். ஆண்டவரே என்னை மன்னியும் என்று கதறினார். அந்த எரிச்சலையும் கோபத்தையும் விட்டு வெளியே வந்தார்.

*எப்பிராயீம் திருப்பிப் போடாத அப்பம். தன்னுடைய வாழ்க்கையில் இருக்கிற பாவத்தை நியாயப்படுத்தக் கூடிய அனுபவம். சிலர் தன் பாவத்தை நியாயப்படுத்துவார்கள்.*

குறிப்பிட்ட ஒரு மாநிலத்திற்கு ஊழியத்திற்கு போகும் போது ஒரு ஸ்தாபனத்தின் அலுவலகத்திலே நான் தங்குவதுண்டு. என்னை நன்றாக அவர்கள் கவனித்துக்கொள்வார்கள். ஊழியத்தை முடித்து விட்டு நான் அங்கிருந்து தான் புறப்படுவேன். இவை ஊழியத்தின் ஆரம்ப காலத்தில் நடந்த நிகழ்வு. அங்கு போகிற நாட்களில் அங்குள்ள ஆலயம் மற்றும் வெளிக்கூட்டங்களை நிறைவேற்றி நான் கடந்து வருவேன். அந்த ஸ்தாபனத்தை நடத்தி வந்த அந்த ஸ்தாபகர் மிகவும் அன்பாக பேசுவார். நன்றாக கவனிப்பார். ஊழியர்கள் எல்லோரையும் அன்பாக பார்த்துக்கொள்வார். தம்பி நீங்கள் வந்தாலே நான் மிகவும் உற்சாகமாக ஆகி விடுவேன் என்று சொல்வார். நமக்கு நல்ல ஆவிக்குரிய அனுபவங்கள் கிடைக்கும். தம்பி நம்மோடு இருக்கிற நாட்கள் பரலோக அனுபவமாய் இருக்கும் என்று மிகவும் சந்தோஷப்படுவார். எனக்கு சாப்பாடு அவரே பரிமாறுவார். ஐயா நீங்கள் பரிமாறக் கூடாது. நீங்கள் உட்காருங்கள் என்று சொன்னால் இல்லை நீங்கள் உட்காருங்கள் நான் பரிமாறுகிறேன் என்று சொல்லி மிகவும் கட்டாயப்படுத்துவார். நான் சாப்பிட்ட தட்டைக் கூட என்னை எடுக்க விடமாட்டார். ஓடி வந்து வேகமாய் அதை எடுத்துக்கொண்டு செல்வார். ஒரு பெரிய ஸ்தாபனத்தை நடத்தக் கூடிய மனிதர். ஆனால் அவருடைய வாழ்க்கையில் கோபம் என்று வந்துவிட்டால் அங்கு யாரும் நிற்க முடியாது. கோபம் வந்தால் பெரிய சத்தம் போடுவார். அவருடைய அலுவலகத்தில் இருக்கக் கூடியவர்கள் கைகால்கள் எல்லாம் நடுங்கி போய் இருப்பார்கள். சில நேரங்களில் தமிழ்நாட்டை சேர்ந்தவர்கள் என்னிடத்தில் தனித்தனியாக ஜெபம் பண்ண வருவார்கள். அப்பொழுது ஒருவர் ஸ்தாபன தலைவரைக் குறித்து ஐயா, மிகவும் அன்பானவர் எல்லாருக்கும் மிகவும் நன்றாக உதவி செய்வார் ஆனால் அவருக்கு கோபம் வந்தால் எங்களால் அதை தாங்கவே முடியாது. என்று சொன்னார்கள். அவருடைய அலுவலகத்தில் அவருக்கு அடுத்தபடியாக பணப்பொறுப்பில் இருக்கக் கூடிய குடும்பத்தார் கணவன் மனைவியாக வந்து என்னிடத்தில் நின்றார்கள்.

அப்போது அவர் அண்ணா, ஐயா கோபப்பட்டு கடந்த வாரத்தில் என் கண்களுக்கு முன்பாக என் மனைவியை கன்னத்தில் ஓங்கி அறைந்து விட்டார். அதை என்னால் தாங்கி கொள்ள முடியவில்லை என்று சொன்னார். திருமணமாகி ஏழு ஆண்டுகள் ஆகின்றது. ஒருநாள் கூட என் மனைவியினிடத்தில் கோபப்பட்டதில்லை. அவளை நான் அடித்ததில்லை ஆனால் என் கண்களுக்கு முன்பாக என் மனைவியை அவர் அறைந்துவிட்டார். சில நாட்களாக அவளுக்கு காதில் வலி ஏற்பட்டு, தாங்க முடியாமல் கஷ்டப்பட்டாள் என்றார். அவ்வளவு கோபமாக அடித்துவிட்டார். கணக்கை தவறாக கூட்டி சொன்னதின் நிமித்தமாக, அவர் இன்னவிதமாக நடந்து கொண்டார். எங்களால் தொடர்ந்து இந்த ஸ்தாபனத்தில் இருக்க முடியுமா என்று தெரியவில்லை என்று கண்ணீரோடு அழுதார்கள். அறுபது வயதான அந்த கர்த்தருடைய மனிதருக்கு தொண்டையில் ஒரு சிறிய கட்டி வந்தது. அதை மருத்துவனையில் சோதித்து பார்த்த போது அது கேன்சர் கட்டியாக தொண்டை முழுவதும் பரவியிருந்தது. அந்த சோதனை அறிக்கை வந்தவுடனே அந்த ஊழியரின் மனைவி முதலாவது என்னிடம் அலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார்கள். அப்போது அந்த ஊழியர் என்னிடம் தம்பி நீங்கள் கண்ணீரோடு ஜெபிப்பீர்கள். நீங்கள் எனக்காக ஜெபிக்க வேண்டும். காரணம் தேவன் என் பாவத்திற்கு சரியாக என்னை தண்டித்துவிட்டார் என்று சொன்னார். என்னால் கோபத்தை கட்டுப்படுத்த முடியவில்லை. வார்த்தை மீறி சில காரியத்தைபேசி விடுகிறேன். எத்தனையோ முறை போராடியும் அதிலிருந்து வெளியே வர முடியவில்லை. எத்தனையோ முறை ஆண்டவர் என் பாவத்தை உணர்த்தியும் நான் மனம் மாறவில்லை. முடிவு என்னுடைய தொண்டையில் இப்போது கேன்சர் கட்டி வந்துவிட்டது என்றார். நான் அவருக்காக ஜெபித்தேன். அறுவை சிகிச்சை முடித்து அவர் வீட்டில் இருந்தார். அவரை பார்க்கும்படிக்கு நான் சென்றேன். அவருடைய குரலே இல்லாதபடிக்கு ஆண்டவர் எடுத்துப் போட்டார். அவர் பேசினால் குரலே வராது வெறும் காற்று தான் வரும். அவருடைய அசைவை வைத்து தான் நாம் புரிந்து கொள்ள வேண்டும். நான் பார்க்க சென்ற போது கதறி அழ ஆரம்பித்தார். என் பாவத்திற்கு சரியாக தேவன் என்னைத் தண்டித்து விட்டார் என்றார்.

*வெளியே பக்தியுள்ளவர்கள் போல் வேஷம். ஆனால் அந்த மனிதர்களுடைய வார்த்தைகள் பிறரை அதிகமாய் காயப்படுத்திவிடும். கொடுமையான வார்த்தைகளை உபயோகப்படுத்துவார்கள். எப்பிராயீம் கோத்திரத்தார் இஸ்ரவேலிலே மிகவும் மேன்மையான ஆசீர்வாதத்தை பெற்றவர்கள். ஒருநாளிலே கர்த்தரால் தண்டிக்கப்பட்டு அந்த கோத்திரமே இல்லாத நிலைக்கு தள்ளப்பட்டார்கள்.*

***அந்நியர் அவனுடைய பலத்தைத் தின்கிறார்கள்; அவனோ அதை அறியான்; நரைமயிரும் அவனில் தெளித்திருக்கிறது, அவனோ அதை அறியாதிருக்கிறான். இஸ்ரவேலின் அகந்தை அவர்கள் முகத்துக்கு முன்பாகச் சாட்சியிட்டாலும், அவர்கள் தங்கள் தேவனாகிய கர்த்தரிடத்தில் திரும்பாமலும், இவை எல்லாவற்றிலும் அவரைத் தேடாமலும் இருக்கிறார்கள். எப்பிராயீம் பேதையான***

***புறாவைப் போல் இருக்கிறான், அவனுக்குப் புத்தியில்லை; எகிப்தியனைக் கூப்பிடுகிறார்கள்; அசீரியனிடத்துக்கும் போகிறார்கள். – ஓசியா 7:9–11***

அப்படியென்றால் சிறையிருப்பு அவனை வந்து சேர்ந்தது. ஞானத்தை இழந்தான் மேன்மையை இழந்தான். பெலத்தை இழந்தான். எதிராளிகள் அவனுடைய பலத்தை தின்று போட்டார்கள். ஏன்? அவன் திருப்பிப்போடாத அப்பமாயிருந்தான். ஒரு தோசையாக இருந்தாலும் இரண்டு பக்கமும் வேக வேண்டும். இட்லியானாலும் நன்றாக வேக வேண்டும் அப்போது தான் சாப்பிட முடியும். எந்த உணவுப்பொருளாக இருந்தாலும் நன்றாக வெந்தால் தான் அதை சாப்பிட முடியும். எப்பிராயீமைக் குறித்து ஆண்டவர் சொல்லுகிறார் அவன் திருப்பிப் போடாத அப்பம். அவன் தன் பாவத்தை மறைத்துவைத்துக்கொண்டான். தன் பாவத்திற்காக மனஸ்தாபப்படவில்லை என்று ஆண்டவர் சொல்லுகிறார். எப்பிராயீம் தன் பாவத்தினிமித்தமாக தேவனுடைய கோபத்தண்டனை உக்கிரகமாய் அவன் மீது வந்த போது அவன் சிறையிருப்பை நோக்கி போகும் போது தான் அவன் கர்த்தரிடத்திலே மனந்திரும்புகிறான். தன்னுடைய இளம் வயது பாவத்தை நினைக்கிறான். எந்தெந்த இடத்திலெல்லாம் நான் தவறினேன். எங்கெல்லாம் ஆண்டவரை வேதனைப்படுத்தினேன். இன்றும் எதையெல்லாம் செய்து நான் ஆண்டவரை வேதனைப்படுத்துகிறேன் என்று நினைக்கிறான். ஆண்டவர் அன்புள்ள தெய்வம். ஆனால் ஒரு மனிதன் தேவனுடைய கட்டளையை மீறி தேவனுக்கு விரோதமான பாவத்தை செய்யும் போது அவன் மீது துக்கமுள்ளவராய் இருக்கிறார். அவனுக்கு முகத்தை அல்ல முதுகை காட்டுகிறார். பாவத்திற்கு தக்க தண்டனையை பெறும் போது அந்த இடத்திலே உணருகிறானா என்று பார்க்கிறார். உணர்வுள்ளவனாகி அவன் தன் பாவத்திற்காக மனஸ்தாபப்படும் போது அவனை நோக்கி தேவன் இறங்கி வருகிறார். காரணம் அவன் தன் பாவத்திற்காக மனஸ்தாபப்படுகிறான். நம்முடைய பாவம் நம்முடைய கண்களுக்கு தெரியாது. சில ஜென்ம சுபாவம் நமக்குள்ளே அடங்கியிருக்கிறது. அது பிறப்பாலே வரும். சிலர் மற்றவர்களை காயப்படுத்துவது போல வார்த்தைகளை பேசிக்கொண்டேயிருப்பார்கள். சிலர் மிகவும் எரிச்சலடைவார்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமான கீழ்ப்படியாமையின் பாவங்கள் உண்டு. அந்த கீழ்ப்படியாமையின் பாவத்தை ஆண்டவர் இயேசுவின் இரத்தத்தினாலே கழுவி அவர் கொடுத்த ஆவியினாலே நாம் மேற்கொள்ளாதிருந்தால் நாம் பரலோகத்திலே பிரவேசிக்க முடியாது. தேவனுடைய மெய்யான ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்ளவும் முடியாது. நம்முடைய ஜீவியத்திலே ஒரு மாற்றம் வேண்டும். அதை பரலோகம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறது. நாம் உணர்வடையும் போது மனம்மாறும் போது நம்மை நோக்கி ஆண்டவர் இறங்கி வருகிறார். தீவிரமாய் வருகிறார். எப்பிராயீம் எனக்கு அருமையான குமாரன் என்று சொல்லுகிறார். அவனுக்காக

*என் இருதயம் கொதிக்கிறது அவனுக்கு நான் உருக்கமாய் இறங்குவேன் என்று சொல்லுகிறார். உங்கள் வாழ்க்கையை நீங்கள் அலசிப் பார்க்க வேண்டும்.*

**சில நேரங்களில் ஆண்டவர் என் வாழ்க்கையில் உண்டான தவறுகளை எனக்கு தெரியப்படுத்துவார். எதுவெல்லாம் தவறாக, குற்றங்களாக, குறைகளாக இருக்கிறதோ அதையெல்லாம் தரிசனத்தில் ஆண்டவர் காண்பித்துக்கொண்டேயிருப்பார். அதை நீ சரிசெய். இதை நீ செய்வது சரியில்லை என்று ஆண்டவர் தெரியப்படுத்துவார். அப்படி எப்போதெல்லாம் ஆண்டவர் எனக்கு தெரியப்படுத்துகிறாரோ அப்போதெல்லாம் காலை தொடங்கி இரவு வரைக்கும் ஆண்டவருக்கு அதிகமாய் நன்றி சொல்லி நான் அதிகமாய் அழுவேன். ஏனென்றால் என்னிடம் இருக்கிற தவறை என் அருகில் இருப்பவர்கள் கூட வந்து சொல்வதில்லை. என் கூட இருப்பவர்கள் இதை எப்படி நாம் அண்ணனிடம் சொல்வது என்று சொல்லமாட்டார்கள். ஆனால் என்னை பார்த்துக்கொண்டிருக்கிற என் ஆண்டவர் என் மீறுதலை என் தவற்றை எனக்குள்ளே மறைந்திருக்கிற தேவையில்லாத காரியங்களை எனக்கு காண்பிக்கும் போது நான் முகங்குப்புற ஆண்டவருடைய சமூகத்திலே விழுந்து அழுது என் வாழ்க்கையை எப்படியாவது உமக்குப் பிரியமாக மாற்ற வேண்டுமென்று அழுது ஜெபிப்பேன். ஒவ்வொரு காரியத்திலும் ஆண்டவர் என்னை விடுதலையாக்கி இன்றுவரைக்கும் நடத்தி கொண்டிருக்கிறார். அவருக்கே துதியும் கனமும் மகிமையுமுண்டாவதாக.**

*தவறுகள் நம் வாழ்க்கையில் வரும் போது அதற்காக நாம் தேவ சமூகத்திலே மனஸ்தாபப்பட்டு அழும் போது ஆண்டவர் மனதுருக்கம் கொண்டு ஓடி வருகிறவராய் இருக்கிறார். ஒருபக்கம் திருப்பிப் போடாத வாழ்க்கை ஆண்டவரை விட்டு நம்மை தூரப்படுத்துகிறதாய் இருக்கிறது. அதிக தூரமாய் நம்மைக் கொண்டு போய் விடுகிறது. அவருக்கும் நமக்கும் இடையே தொடர்பே இல்லாத அளவுக்கு நம்மை தூரமாய் தள்ளி கொண்டு போகிறது. காரணம் நம்முடைய வாழ்க்கையில் இருக்கக் கூடிய கெட்ட அனுபவங்கள் ஆண்டவரை விட்டு நம்மை தூரப்படுத்துகிறது.*

**குறிப்பிட்டக் கல்லூரி மாணவர்கள் ஒரு முறை ஒரு செயல்திட்டம் ஒன்றை செய்தனர். தண்ணீரிலே போகும் ஒரு சிறிய படகை தயாரிக்க வேண்டும் என்று எண்ணி அதிலே ஒவ்வொருவரும் ஒரு படகை செய்து கொண்டு வந்தனர். அதிலும் ஒரு மாணவன் தயாரித்த படகு மிகவும் அருமையாக இருந்தது. அது தண்ணீரிலே கொஞ்சம் தூரம் சென்று**


# எழுப்புதல் உபவாச ஜெபம்

**நாள் : 04.06.2022 முதல் சனிக்கிழமை**
**நேரம்: காலை 9 மணி முதல் மாலை 2 மணி வரை**

**தேவ செய்தி:**
**சகோ. T. ஆசீர் ஞானராஜ்**

**இடம்: எழுப்புதல் ஜெப மையம், முதலூர்.**

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!!*
*தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!*

திரும்பி வரும். அந்த விதமாக அவன் செய்திருந்தான். அவனுக்கு விருதுகள் கிடைத்தது. எல்லோரும் அவனை கனப்படுத்தினார்கள். அவனுடைய நண்பர்களுக்கு அது பெரிய மகிழ்ச்சியாய் இருந்தது. ஒருநாள் அவர்கள் எல்லாரும் அருகில் உள்ள கடற்கரைக்கு சென்று நீ செய்த படகை நாம் இன்று தண்ணீரில் ஓட விடுவோம் அதை கொண்டு வா என்று சொல்லி அதை தண்ணீரிலே ஓட விட்டார்கள். அதுவும் கொஞ்ச தூரம் போன போது பெரிய அலை ஒன்று வந்து அந்த படகை கவிழ்த்து போட்டது. மாலை வரைக்கும் தேடினார்கள் பின்பு அவனோடு கூட இருந்த மற்ற நண்பர்கள் திரும்பி வீட்டிற்கு வந்து விட்டார்கள். ஆனால் இவனோ இரவு வரைக்கும் அந்த கடற்கரையில் எவ்வளவு தூரம் நடக்க முடியுமோ அவ்வளவு தூரம் நடந்து கடற்கரை ஓரமாய் பார்த்து கொண்டே செல்கிறான்.

அலையில் மறுபடியும் எப்படியாவது வந்து விடுமா என்று ஒரு சில நாட்கள் அப்படியே அவன் போய் தேடிக்கொண்டேயிருந்தான். ஆனால் கிடைக்கவில்லை. அதினிமித்தமாக அவனுக்கு மிகுந்த துக்கம். ஒருநாள் கடற்கரை அருகில் இருக்கக் கூடிய சுற்றுலா பகுதியில் தன்னுடைய நண்பர்களோடு போன போது கடற்பொருட்களை கையினால் தயாரித்து விற்கக் கூடிய இடத்தில் அவன் தயாரித்த படகு பெரிதாக அதிலே இருந்தது. அதிலே அவன் பெயர் எழுதப்பட்டிருந்தது. அந்த கூட்டத்திலே வேகமாய் முண்டியடித்து போய் அந்த படகை தூக்கி இது என்னுடைய படகு இதை நான் தயாரித்தேன் இதில் என்னுடைய பெயர் எழுதியிருக்கிறது இது என்னுடையது என்று சொன்னான். அப்போது அந்த கடைக்காரர் சொன்னாராம் தம்பி நீ ஒருவேளை அதை தயாரித்திருக்கலாம். ஆனால் இதை மீனவர்கள் அவர்கள் வலையில் கிடைத்தது என்று சொல்லி என்னிடத்தில் சில ஆயிரம் ரூபாய்க்கு விற்று விட்டார்கள். அதைக் கொடுத்துவிட்டு நீ இதை வாங்கிச் செல்லலாம் என்று சொல்லி விட்டார். அவன் வீட்டிற்கு சென்று அவன் கையில் இருக்கக் கூடிய அனைத்து பொருட்களையும் விற்று தேவையான பணத்தை ஆயத்தம் செய்ய ஆரம்பித்தான். ஆனால் அவனால் அந்தளவுக்கு பணம் சேர்க்க முடியவில்லை. நேராக ஒரு இரத்ததான வங்கிக்கு சென்று என் இரத்தத்தை கொடுத்தால் நீங்கள் பணம் தருவீர்களா? என்று கேட்டான். அவர்களும் தருகிறோம் என்று சொன்ன போது அவனுடைய இரத்தத்தை கொடுத்து மீதி பணத்தை எடுத்துக்கொண்டு வேக வேகமாய் ஓடி அந்த கடைக்காரரிடம் அந்த படகை வாங்கி அவன் கையில் வைத்து ஏராளமான முத்தங்களை அதற்கு கொடுத்தான்.

ஏனென்றால் காணாமால் போன படகு திரும்ப கிடைத்தது. அது அவனுக்கு சொந்தமானது. அதைப் போலத்தான் இன்றும் பாவத்தில் தொலைந்து போன ஆத்துமாக்களை ஆண்டவர் தேடிக்கொண்டேயிருக்கிறார்.

*பிரியமானவர்களே, கர்த்தராகிய தேவன் தாயின் கருவில் உங்களை உண்டாக்கின போது, நீங்கள் தேவனுக்கு முதல் சொந்தமாக மாறினீர்கள். ஆனால், பாவத்தில் தொலைத்து போன போது இயேசு தமது இரத்தத்தை சிந்தி மீட்டுக்கொண்டதினாலே இரட்டத்தனையான சொந்தமாக மாறினீர்கள்.*

*சகோதரனே! சகோதரியே! உங்கள் வாழ்க்கை இருபுறமும் வெந்த அப்பமாக மாற இயேசுவுக்கு ஒப்புக் கொடுப்பீர்களா! மறைவான பாவத்தை விட்டு வெளியே வரும்படி இயேசுவை நோக்கிப் பாருங்கள். நீங்கள் இழந்த சுகத்தை, ஆசீர்வாதத்தை, சமாதானத்தை தேவன் தருவார்.*

# பணித்தளச் செய்திகள்

## ஒடிசா மாநிலம்

### ஜம்முகுடா பணித்தளம்

**ஜம்முகுடா:**

- இங்கு ஞாயிறுதோறும் ஆராதனை நடைபெறுகிறது. 20 பேர் கலந்து கொள்கின்றனர்.
- சிபோ என்ற சகோதரன் வியாதியோடு இருந்தான். மேலும் மனநிலை பாதிக்கப்பட்டுமிருந்தான். தொடர் ஜெபத்தினால் கர்த்தர் சுகம் கொடுத்தார்.
- இந்த சிபோ என்பவரது தாயார் குருமாயி (சாமியாடி குறி சொல்லுபவர்) இவரது இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.
- ரஸியா மட்டம் என்பவர் கீழே விழுந்து விட்டார். இவரால் இப்போது நடக்கமுடியவில்லை. இவருக்கு சுவிசேஷம் அறிவித்து ஜெபித்தோம். இயேசு எனக்கு சுகம் கொடுத்தால் ஆராதனைக்கு வருகிறேன் என்றார். கர்த்தர் இவரை சுகப்படுத்தும்படியாக ஜெபியுங்கள்.
- ஆர்கு ஹந்தல் என்பவரது மனைவி கோனே ஹந்தல் இவர்கள் இருவரும் ஆராதனைக்கு வருவதில்லை. இவர்களது பிள்ளைகள் தொடர்ந்து ஜெபத்திற்கு வருகின்றனர். இவர்களின் இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.
- சில்போ ஹந்தல் என்பவருக்கும் சுவிசேஷம் அறிவிக்கப்பட்டுள்ளது. கர்த்தர் இவர்களை இரட்சிக்கும்படியாக ஜெபியுங்கள்.
- சிட்டு ஹந்தல் இவரது மனைவி பொத்தி ஹந்தல் என்பவர்கள் மது பழக்கத்திற்கு அடிமையாகியுள்ளனர். இவர்களுக்காக ஜெபியுங்கள்.

**ஜக்கிபாரி:**

- சொமுரு ஹந்தல், சாம்பிரி ஹந்தல், கலியா ஹந்தல் மேலும் (இவரது மனைவி) இவர்கள் புதிதாக ஆராதனைக்கு வருகின்றனர். கர்த்தர் இவர்களை ஆசீர்வதிக்கும்படி ஜெபியுங்கள்.
- சொமுரு என்பவருக்கு தகப்பனார் இல்லை. இவரது தாயார் சிரிமே ஹந்தல் என்பவர் ஆராதனைக்கு வருவதில்லை. இவர்கள் இரட்சிக்கப்பட்டு ஆராதனைக்கு வர ஜெபியுங்கள்.
- சதா என்பவர் மற்றும் அவரது தாயார் ஆராதனைக்கு வருகிறேன் என்று கூறுகிறார்கள். இவர்களுக்காக ஜெபிக்கவும்.
- புங்கேரா, சிபோ, டிப்பா, லிங்கானா, சொன்யா, சுஹறிபங்கி ஆகியோர் சுவிசேஷ எதிர்ப்பாளர்கள். இவர்களின் இரட்சிப்புக்காக ஜெபிக்கவும்.
- எட்ரு, பந்து ஆகியோர் தரணி பூஜா செய்பவர்கள். இவர்களது கிரியைகள் அழிக்கப்பட ஜெபியுங்கள்.

### சுவிசேஷ ஊழியம்:

**சுடுக்:** இக்கிராமத்தில் சுவிசேஷம்

அறிவித்தோம். ஒரு சகோதரிக்கு சரீர முழுவதும் புண்கள் இருந்தது. இதற்கு முன்பு சுவிசேஷம் சொல்லி ஜெபித்து வந்தோம். இப்போது பார்த்தபோது மிகவும் சுகமாக உள்ளார்கள்.

**சரியாபல்லி:** இங்கு சுவிசேஷம் அறிவித்தோம். ஒருவர்கூட இயேசுவை ஏற்றுக்கொள்ளவில்லை. இவர்களின் இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

**புர்பாணி:** இங்கு சுவிசேஷம் அறிவித்தோம். ஆர்வமுடன் சுவிசேஷம் கேட்டனர். இக்கிராம மக்களின் இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

**ஜெயந்த்கிரி:** இங்கு சுவிசேஷம் அறிவித்தோம். இங்கு மால்த்தி என்பவர் இயேசுவை ஏற்றுக் கொள்கிறேன் என்றார்கள். இவருக்காக ஜெபியுங்கள்.

**ஒன்ட்ருகுடா:** இங்கு சுவிசேஷம் அறிவித்தோம். இங்கு சிலை வழிபாடு தீவிரமாக செய்கிறார்கள். இவர்கள் இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

**பத்லம் பஞ்சர், பொனஸ்புட்:** இங்கு குவி இன மக்களுக்கு சுவிசேஷம் அறிவித்தேன். இவர்களின் இரட்சிப்புக்காக ஜெபிக்கவும். இங்கு மாடுகளை பலியிட்டு பூஜை செய்கிறார்கள். இவர்களின் இந்த செயல்பாடு நிறுத்தப்பட ஜெபியுங்கள்.

**சொம்பா ஜோடி:** இங்கு இராணா, கொட்டியா, ஹரிஜன், கோந்து இன மக்கள் உள்ளனர். இவர்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளவும் ஜெபியுங்கள்.

**ரங்குனிகுடா:** இங்கு கொட்டியா, ஹரிஜன் இனமக்கள் உள்ளனர்.

**குந்தாபுட்:**

- இங்கு சொட்டியா, தோரா இனமக்கள் உள்ளனர். இவர்களுக்கு சுவிசேஷம் அறிவித்தோம். இவர்கள் இரட்சிக்கப்படும்படியாக ஜெபிக்கவும்.
- நெகேமியா ஹந்தால் (ஊழியர்). இவரின் மனைவி பெயர் எஸ்தர். மூன்று மகன்கள் உள்ளனர். இவர்கள் நன்றாக படிக்க வேண்டும். குடும்பத்தில் சமாதானம் இல்லை. இந்த காரியங்களுக்காக ஜெபியுங்கள்.

## இந்திரா காலனி
### (நவ்ரங்கபூர் மாவட்டம்)

**புர்ஜா:**

- இங்கு ஞாயிறு தோறும் ஆராதனை நடைபெறுகிறது. புர்ஜா கிராமத்திற்கு அருகில் உள்ள ஒத்தியாஹன்டி என்ற கிராமத்தில் புதிதாக ஊர்மிளா கோன்ட், குசோ கோன்ட் ஆகியோர் குடும்பமாக இரட்சிக்கப்பட்டு ஆராதனைக்கு வருகின்றனர்.
- சிரஞ்சீவ் என்ற சிறுவன் அடிக்கடி நோயினால் பாதிக்கப்பட்டான். தொடர்ந்து அவர்களது வீட்டில் தினமும் ஜெபித்து வருகிறோம். இப்போது சுகமாக இருக்கிறான்.
- மற்ற விசுவாசிகள் விசுவாசத்தில் வளரும்படியாக ஜெபிக்கவும்.
- மங்கள்தேய் என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தாள். ஜெபத்தினால் கர்த்தர் விடுதலை கொடுத்தார். இவர்கள் இரட்சிக்கப்பட ஜெபிக்கவும்.
- ராஜ்மன் கண்டா, மகேந்திரா, சுர்ஜித் ஆகியோருக்கு சுவிசேஷம் அறிவித்தேன். இயேசுவை ஏற்றுக் கொள்கிறோம் என்று

கூறினார்கள். இவர்களது இரட்சிப்புக்காக ஜெபியுங்கள்.

**இந்திரா காலனி:** இக்கிராமத்திலும் ஞாயிறுதோறும் ஆராதனை நடைபெற்று வருகிறது. சமீர் என்ற சிறுவனுக்கு வயிறு வீக்கமாக இருந்தது. ஜெபத்தினால் கர்த்தர் சுகம் கொடுத்தார். இப்போது இவனது பெற்றோர் ஆராதனைக்கு வருகின்றனர்.

**ஜெபக்குறிப்பு:**

- புர்ஜா கிராமத்தில் புதிதாக வரும் விசுவாசிகள் கர்த்தருக்குள் நிலைத்திருக்க ஜெபியுங்கள். இவர்கள் (10 பேர்) ஞானஸ்நானம் பெறும்படியாக ஒப்புக் கொடுத்துள்ளனர். இவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுக்க வேண்டும். இதற்காக ஜெபியுங்கள்.
- மது என்ற சகோதரிக்கு சளி காய்ச்சலினால் மிகவும் கஷ்டப்பட்டார்கள். ஜெபத்தினால் கர்த்தர் சுகம் கொடுத்தார். ஆராதனைக்கு வருகிறோம் என்று அவர்களது குடும்பத்தினர் கூறுகின்றனர். இவர்கள் இரட்சிக்கப்பட ஜெபியுங்கள்.

## சுவிசேஷ ஊழியம்:

- தொஹறா, பொஜரி, கும்டாகுடா, நார்திகி கட்டன்திகி, துங்கியா கொபா, ஜானிகுடா, டட்கா டொங்கிரி, நாக்ஜொரி, காஜூசாடு ஆகிய கிராமங்களில் சுவிசேஷம் அறிவித்தேன். இக்கிராமங்களில் கிரியை செய்கிற அசுத்த ஆவியின் கிரியைகள் அழிக்கப்படவும், ஜனங்கள் இரட்சிக்கப்படவும் ஜெபியுங்கள்.
- மால்பெடா, கெந்துகுடா, கும்முடாகுடா, ரங்கமட்டிகுடா ஆகிய கிராமங்களில் தொடர்ந்து ஜெபம் நடத்தி வருகிறேன். இங்கு வாரந்தோறும் ஆராதனை நடத்துவதற்கு வாசல் திறக்கப்படும்படி ஜெபியுங்கள்.

## தாடி பணித்தளம்

**தாடி:**

- தாடி கிராமத்தில் ஞாயிறுதோறும் ஆராதனை நடைபெற்று வருகிறது.
- தாமு என்ற விசுவாசி ராயகடாவில் வேலைக்காக சென்றார். அங்கு மனநிலை பாதிக்கப்பட்டு பைத்தியமாகிவிட்டார். இப்போது அவரைக் கட்டி வீட்டிற்கு கொண்டு வந்துள்ளனர். கர்த்தர் இவருக்கு விடுதலை கொடுக்கும்படி ஜெபியுங்கள். இவரது தகப்பனார் எனது மகனுக்கு இப்படியாகிவிட்டது. மந்திரவாதியிடம் செல்வேன். இங்கு ஊழியர்கள் யாரும் ஜெபிக்கவரக் கூடாது என்றார். நாங்கள் எதிர்ப்பை மீறி ஜெபித்து வந்தோம். இப்போது இவர்கள் எங்கும் செல்லவில்லை. தாமு சகோதரனும் தற்போது சாதாரணமாக உள்ளார். இவர்களது குடும்பம் பின்வாங்காமல் கர்த்தருக்குள் நிலைத்திருக்கும்படியாக ஜெபியுங்கள்.
- ரிபிக்கா என்ற சகோதரி பன்னிரெண்டாவது வகுப்பு தேர்வு எழுதுகிறாள். இக்கிராமத்தில் பெண்கள் யாரும் எட்டாவது வகுப்பிற்கு மேல் படித்தது கிடையாது. நமது விசுவாசி சகோதரி தேர்வில் வெற்றி பெற ஜெபியுங்கள்.

# உலகச் செய்திகள்

1. இலங்கையில் போராட்டம் நீடிப்பதால் பிரதமர் பதவியில் இருந்து மகிந்த ராஜபக்சே விலகினார். வன்முறை வெடித்ததால் நாடு முழுவதும் ஊரடங்கு அமல்படுத்தப்பட்டு உள்ளது.
2. கூடங்குளம் அணுமின் நிலையத்தில் 3-வது அணு உலைக்கான அழுத்த கலன் பொருத்தும் பணி நடந்தது.
3. சமீபகாலங்களில் ஆசிரியர்களிடம் மாணவர்கள் நடந்துகொள்ளும் சம்பவம் அதிர்ச்சி அளிக்கிறது. இந்த நிகழ்வுகள் கையை மீறி சென்றுவிடாமல் தடுக்க அரசு தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சென்னை ஐகோர்ட்டு கூறியுள்ளது.
4. பிலிப்பைன்சில் பல்கலைக் கழக வளாக குடியிருப்பில் ஏற்பட்ட பயங்கர தீ விபத்தில் 8 பேர் உடல் கருகி பலியாகினர்.

**செய்திகளுக்காக ஜெபிப்போம்!**

## காணிக்கை அனுப்புவோர் கவனத்திற்கு...

உங்கள் காணிக்கைகளை M.O/ D.D / Cheque மூலமாக
"CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT" என்ற பெயரில் அனுப்பவும்.

வங்கி முகவரி: **INDIAN OVERSEAS BANK**, SATTANKULAM,
CALVARY GOSPEL MISSIONARY MOVEMENT.

Account No: **012401000017528.**

Branch IFS Code No: **IOBA0000124**

GPay **93378 19993**
**T.ASIR GNANARAJ**

## தொடர்பு கொள்ள வேண்டிய அலைபேசி எண்கள்

| | |
|---|---|
| கோவை | – 94865 88270 |
| சென்னை | – 81909 25800 |
| திருச்சி | – 94886 34482 |
| மேட்டுப்பாளையம் | – 98435 80077 |
| ஈரோடு | – 99434 46728 |
| ஓசூர் | – 90369 43712 |
| திருவள்ளூர் | – 94451 49642 |
| பெங்களூரு | – 90369 43712 |
| தாராபுரம், பொள்ளாச்சி | – 98435 80077 |
| வெள்ளகோவில் | – 94865 88270 |
| ஒட்டன்சத்திரம் | – 75984 03162 |

Owned and Published by: T.Asir Gnanaraj from 6/128, Mudalur, Toothukudi District - 628 702
and Printed by : G.David at Divine Offset, 116-C, New Western Building, Old Bus Stand, Tisaiyanvilai - 627657. Editor: T.Asir Gnanaraj.





பொய்ப்பாரிகுடா
பணித்தளத்தில் சுவிசேஷம்





Registered Newspaper RNI No. TNTAM/03/15637
Date of publication on 10.05.2022. Posted at Mudalur P.O. on 14th and 15th of every month.

சால்வேஷன் மிஷனெரி ஊழியங்கள் நடத்தும்

பெங்களூருவில்

# மிஷனெரி
# பிரதிஷ்டை ஆராதனை

## 29.05.2022
## ஞாயிற்றுக்கிழமை

காலை 6 மணி மற்றும் காலை 8 மணி

யெகோவா நிசி பெந்தேகோஸ்தே சபை,
கௌதமபுரம், ஹலசூரு, பெங்களூரு - 560008.



**தேவ செய்தி**

சகோ.
## T. ஆசீர் ஞானராஜ்

**தொடர்புக்கு: 9443981876**

*ஜெபியுங்கள்! பங்குபெறுங்கள்!! தேவாசீர்வாதம் பெற்றுச் செல்லுங்கள்!!!*

To,

If Undelivered Please return to
**Bro. T.Asir Gnanaraj**
Calvary Gospel Missionary Movement,
Mudalur, Tuticorin District - 628 702.
**Phone: 04639 - 261498**
**Mobile: + 91 94865 88270**